வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 10/2025

வழக்கு சாட்சி – ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: சிவமுருகன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 29.01.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.05 மணி)

நான் மனுதாரர் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. Discharge summary ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.2. 1ம் எதிர்மனுதாரர் வாகன பதிவுச்சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.3. 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.4. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.5. NH ORTHO CARE மருத்துவமனை பில் அசல் ம.சா.ஆ.6. ப்ரீத்தி மருத்துவமனை பில் Summary அசல் ம.சா.ஆ.7. என்னுடைய ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.8. என்னுடைய மீனவர் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.9. என்னுடைய ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.10. என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்கத்தின் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.11. என்னுடைய பேன் கார்டு ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.12. (ம.சா.ஆ.8 முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). என்னுடைய

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.29 17:46:05 +0530

திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.13. நான் பல்வேறு தேதிகளில் இராமேஸ்வரத்திலிருந்து மதுரை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றதற்கான குறிப்புகள் ம.சா.ஆ.14. லேப் ரிப்போர்ட் அசல் ம.சா.ஆ.15. எனக்கு ப்ரீத்தி மருத்துவமனையில் எடுக்கப்பட்ட X–Ray ம.சா.ஆ.16 வரிசை (28 எண்ணிக்கை). எனக்கு இராமநாதபுரம் NH ORTHO மருத்துவமனையில் எடுக்கப்பட்ட X–Ray ம.சா.ஆ.17 வரிசை (6 எண்ணிக்கை). மருத்துவ பில்கள் ம.சா.ஆ.18 வரிசை (108 எண்ணிக்கை). நான் மருத்துவமனைக்கு சென்று வந்ததற்கு போக்குவரத்து செலவுகளுக்கான பில்கள் ம.சா.ஆ.19 வரிசை (4 எண்ணிக்கை). NH ORTHO CARE மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ பதிவேடு ம.சா.ஆ.20. என்னுடைய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

சம்பவம் நடந்த நாள் அன்று இராமேஸ்வரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புலித்தேவன் நகரில் உள்ள என்னுடைய வீட்டிற்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். நான் மேற்கிலிருந்து புறப்பட்டு கிழக்கு நோக்கி வந்து பின்னர் தெற்கு நோக்கி சென்றேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான் கிழக்கிலிருந்து புறப்பட்டு மேற்கு நோக்கி வந்து பின்னர் தெற்கு நோக்கி சென்றதாக சொல்லியுள்ளேன். நான் அந்த பகுதியில் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த பகுதியில் ஆதிராஸ் பேக்கரி உள்ளது. ஆதிராஸ் பேக்கரிக்கு வடக்கு பக்கத்திலிருந்து நான் வந்தேன். அந்த ஆதிராஸ் பேக்கரி வடக்கு மற்றும் கிழக்கு நோக்கி உள்ளது. நான் திட்டக்குடி பகுதியிலிருந்து வரும் ரோட்டில் வந்தேன். நான் தற்போது சொல்லும் திசைக்கும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள திசைக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த பகுதியில் சிக்னல் உள்ளது என்றால் சரிதான்.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.29 17:46:11 +0530

அந்த பகுதியில் எப்பொழுதும் காவலர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அந்த பகுதியில் சாலை குறுகலாக இருப்பதால் அங்கு பேரி கார்டும் இருக்கும். விபத்து ஏற்படுத்திய வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. விபத்து சமயம் அங்கு சிக்னல் போடப்பட்டிருந்தது. ஆதிராஸ் பேக்கரியிலிருந்து சுமார் 4,5 வாகனங்கள் தள்ளி விபத்து ஏற்பட்டது. விபத்து சமயம் நான் ஹெல்மெட் அணிந்திருக்கவில்லை. என் மீது மோதி விபத்து ஏற்படுத்திய வாகனம் Tempo Traveller வாகனம். நான் சொல்வதுபோல் அந்த வாகனம் Tempo Traveller வாகனம் அல்ல என்றும், அது சுற்றுலா பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த வேன் என்றும் சொன்னால் அந்த வேனை தான் நான் Tempo Traveller வாகனம் என்று சொல்லிவிட்டேன். விபத்து சமயம் அந்த வாகனத்திற்கு காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விபத்து நடந்த தேதிக்கு மறுநாள் தான் எனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. நிச்சயிக்கப்பட்டபடி விபத்திற்கு மறுநாள் எனக்கு திருமணம் நடந்தது. சுற்றுலா பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த விபத்தை ஏற்படுத்திய வாகனம் 4,5 வாகனங்களை முந்திச்செல்ல முடியாது என்றால் சரிதான். ஆதிராஸ் பேக்கரிலிருந்து 3,4 வாகனங்களை தாண்டி நின்ற வாகனத்தின் மீது மோதிதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு பெரிய அளவில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதிகப்படியான இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக நான் காயங்களை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் அதிகப்படியான வேலைப்பளுவில் இருந்தேன் என்றும், திருமணத்திற்காக நான் முந்தைய நாள் என் நண்பர்களுடன் சேர்ந்து Bachelor Party நன்றாக மது அருந்தி கொண்டாடிவிட்டு நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதி நான் தான் விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் தெரியாது. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.29 17:46:18 +0530

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எனக்கு இழப்பீடு ஏதேனும் கிடைக்கதக்கது என்றால் அதனை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மட்டும் தான் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சாலை விதிகளை பின்பற்றி தான் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. இழப்பீடு தொகை பெறுவதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு பொறுப்பல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.29 17:46:24 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.